## படிவம் 6–ஐ நிரப்புவதற்கான வழிமுறைகள்
### பொதுவான அறிவுரைகள்

*படிவம் 6–ஐ யார் தாக்கல் செய்யலாம் ?*

1. வாக்காளர் பட்டியல் திருத்தம் நடைபெறும் ஆண்டின் சனவரி முதல் தேதி அன்று 18 வயது நிறைவடைந்து / 18 வயதிற்கு மேற்பட்டு முதல் முறையாக விண்ணப்பிப்பவர்
2. தான் முன்பு பதிவு செய்திருக்கும் தொகுதிக்கு வெளியே தனது சாதாரண இருப்பிடத்தை மாற்றி இருக்கும் நபர்.

*படிவம் 6 எப்போது அளிக்கப்படலாம் ?*

1. தொகுதியின் வாக்காளர் பட்டியலின் வரைவு வெளியீட்டிற்குப் பிறகு விண்ணப்பத்தைத் தாக்கல் செய்யலாம். கோரிக்கைகளைத் தாக்கல் செய்வதற்கென வரையறுக்கப்பட்ட காலகட்டத்தில் விண்ணப்பத்தைத் தாக்கல் செய்ய வேண்டும். வாக்காளர் பட்டியல் திருத்தப்பணி அறிவிக்கப்பட்ட பின்பு மேற்குறிப்பிட்ட காலஅளவைப்பற்றி உரிய அளவில் விளம்பரம் செய்யப்படும்.
2. விண்ணப்பத்தின் ஒரே ஒரு பிரதியை மட்டுமே தாக்கல் செய்ய வேண்டும்.
3. பெயரைச் சேர்ப்பதற்கான விண்ணப்பத்தை ஆண்டு முழுவதும் (திருத்தப் பணிகள் நடைபெறாத காலம் உட்பட) தாக்கல் செய்யலாம். திருத்தப்பணி நடைபெறாத காலங்களில் விண்ணப்பத்தை இருபிரதிகளாக தாக்கல் செய்ய வேண்டும்.

*படிவம் 6–ஐ எங்கே தாக்கல் செய்வது ?*

1. திருத்தப்பணி நடைபெறும் காலத்தில் விண்ணப்பத்தை வரைவு வாக்காளர் பட்டியல் பார்வைக்கு வைக்கப்படும் நிர்ணயிக்கப்பட்ட அமைவிடங்களில் (பெரும்பாலும் வாக்குச்சாவடி அமைவிடங்கள் / அஞ்சலகங்கள்) மற்றும் வாக்காளர் பதிவு அதிகாரி மற்றும் உதவி வாக்காளர் பதிவு அதிகாரி அலுவலங்களிலும் தாக்கல் செய்யலாம்.
2. வாக்காளர் பட்டியல் திருத்தப்பணி நடைபெறாத, ஆண்டின் மற்ற காலங்களில் விண்ணப்பத்தை வாக்காளர் பதிவு அதிகாரியிடமோ, குறிப்பிட்ட மற்ற அலுவலகங்களிலோ தாக்கல் செய்யலாம்.

*படிவம் 6–ஐ எப்படி நிரப்புவது ?*

1. நீங்கள் பதிவு செய்யக்கோரும் தொகுதியின் வாக்காளர் பதிவு அதிகாரிக்கு விண்ணப்பத்தை முகவரியிடவேண்டும். காலியாக உள்ள இடத்தில் தொகுதியின் பெயர் நிரப்பப்பட வேண்டும்.
2. பெயர் (ஆவணச் சான்றுடன்)

   வாக்காளர் பட்டியலிலும் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையிலும் வரவேண்டியபடி பெயர் நிரப்பப்பட வேண்டும். குடும்பப் பெயர் தவிர்த்த முழுப்பெயரை முதல் கட்டத்திலும் குடும்பப்பெயரை இரண்டாவது கட்டத்திலும் எழுத வேண்டும். உங்களுக்கு குடும்பப்பெயர் இல்லாவிட்டால் பெயரை மட்டும் எழுத வேண்டும். வாக்காளருடைய பெயரின் பகுதியாகவோ குடும்பப்பெயரின் பகுதியாகவோ இல்லாதபட்சத்தில் சாதியின் பெயரைக் குறிப்பிடக்கூடாது. கவுரவ அடைமொழிகளான திரு, திருமதி, செல்வி, கான், பேகம், பண்டிட் போன்றவை குறிப்பிடப்படக்கூடாது.

3. வயது (ஆவணச் சான்றுடன்)

   வாக்காளர் பட்டியல் திருத்தம் செய்யப்படும் ஆண்டின் சனவரி முதல் தேதியன்று விண்ணப்பதாரர் 18 வயது நிறைவடைந்து அல்லது அதற்கு மேற்பட்டு இருக்க வேண்டும். வயது ஆண்டுகள் மற்றும் மாதங்களில் குறிப்பிடப்பட வேண்டும்.

   <u>எ.கா.</u> ஒரு நபர் 01.01.1991 அன்றோ அல்லது அதற்கு முன்போ பிறந்திருந்தால் 01.01.2009–ஐ அடிப்படையாகக் கொண்டு திருத்தப்படும் வாக்காளர் பட்டியலில் தனது பெயரைச் சேர்க்கத் தகுதியுடையவர் ஆகிறார். 02.01.1991 அன்றோ அல்லது அதையடுத்து 01.01.1992 வரையுள்ள இடைப்பட்ட காலத்தில் பிறந்தவர்கள் 01.01.2010–ஐ அடிப்படையாகக் கொண்டு செய்யப்படும் அடுத்த திருத்தத்தில் தமது பெயரைச் சேர்த்துக் கொள்ளத் தகுதியுடையவர்கள் ஆவார்கள்.

4. பாலினம்

உங்களுடைய பாலினத்தை அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் குறிப்பிடவும் (எ.கா.) ஆண்/பெண்/இதரர் தமது பாலினத்தை ஆண் அல்லது பெண் என்று குறிப்பிட விரும்பாத விண்ணப்பதாரர்கள் "இதரர்" என்று குறிப்பிடலாம்.

5. பிறந்த தேதி (ஆவணச் சான்றுடன்)

பிறந்த தேதியை அதற்கென காலியாக விடப்பட்டுள்ள இடத்தில் நிரப்பவும் (தேதி/மாதம்/வருடம்). பிறந்த தேதிக்கான சான்றாக பின்வருவனவற்றுள் ஒன்றை இணைக்க வேண்டும்:

(i) நகராட்சி அமைப்புகளால் அல்லது மாவட்ட பிறப்பு இறப்பு பதிவாளர் அலுவலகத்தால் வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ் அல்லது ஞானஸ்நான சான்றிதழ் ; அல்லது

(ii) விண்ணப்பதாரர் கடைசியாகப் பயின்ற (அரசு/அங்கீகரிக்கப்பட்ட) பள்ளியால் அல்லது வேறு ஏதாவது அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனத்தால் வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ்

(iii) மேற்கண்ட ஆவணச் சான்றுகள் எதுவும் இல்லாத கல்வியறிவற்ற அல்லது ஓரளவு கல்வியறிவுள்ள விண்ணப்பதாரரின் வயது குறித்து அவரின் பெற்றோரில் ஒருவரால் (அவரது பெயர் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும்) வரையறுக்கப்பட்ட படிவத்தில் உறுதிமொழியை இணைக்க வேண்டும். தேவைப்படுவோருக்கு அப்படிவம் வழங்கப்படும்.

6. பிறந்த இடம்

இந்தியாவில் பிறந்து இருந்தால் பிறந்த இடத்தைத் (கிராமம்/நகரம்,மாவட்டம்,மாநிலம்) தயவு செய்து குறிப்பிடவும்.

7. உறவினரின் பெயர்

திருமணமாகாத பெண் விண்ணப்பதாரராக இருந்தால் தந்தை/தாயின் பெயரைக் குறிப்பிட வேண்டும். திருமணமான பெண் விண்ணப்பதாரராக இருந்தால் கணவரின் பெயரைக் குறிப்பிட வேண்டும். பொருந்தாதவற்றை அடித்து விடவும்.

8. சாதாரண வசிப்பிடம்

நீங்கள் பெயரைப் பதிவு செய்யக் கோருகின்ற உங்களது சாதாரண வசிப்பிடத்தின் முழு முகவரியை அஞ்சலகக் குறியீட்டு எண்ணுடன் அதற்கென காலியாக விடப்பட்டுள்ள இடத்தில் குறிப்பிட வேண்டும்.

சாதாரண வசிப்பிடத்திற்கான சான்றாகப் பின்வருவனவற்றுள் ஒன்றை இணைக்க வேண்டும்.

அ. வங்கி/கிசான்/அஞ்சல் அலுவலக நடப்புக் கணக்குக் கையேடு; அல்லது

ஆ. விண்ணப்பதாரரின் உணவுப்பொருள் பங்கீட்டு அட்டை/கடவுச்சீட்டு/ஓட்டுநர் உரிமம்/ வருமான வரி விதிப்பு ஆணை; அல்லது

இ. விண்ணப்பதாரரின் பெயரிலோ அல்லது அவரது பெற்றோர் போன்ற நெருங்கிய உறவினர் பெயரிலோ உள்ள குடிநீர்/தொலைபேசி/மின்சாரம் சமையல் எரிவாயு இணைப்பு போன்றவற்றின் சமீபத்திய ரசீது; அல்லது

ஈ. கொடுத்துள்ள முகவரியில் விண்ணப்பதாரரின் பெயருக்கு வந்து சேர்ந்த தபால் துறையின் தபால்கள்

9. வாக்காளர் பட்டியலில் ஏற்கனவே சேர்க்கப்பட்டுள்ள உறவினர்களின் விவரங்கள்

தொகுதியின் தற்போதைய வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ள நெருங்கிய உறவுள்ள குடும்ப உறுப்பினர்களின் (தாய்/தந்தை/சகோதரர்/சகோதரி/கணவர்/மனைவி) பெயர் மற்றும் பிற விவரங்களை தயவு செய்து நிரப்ப வேண்டும். பிற உறவினர்களான மாமா/அத்தை/சித்தப்பா/பெரியப்பா/ஒன்று விட்ட சகோதர/சகோதரி போன்றோரைக் குறிப்பிடக் கூடாது.

10. உறுதி மொழி

கொடுத்துள்ள முகவரியில் தாங்கள் எந்தத் தேதியிலிருந்து வசித்து வருகிறீர்கள் என்று தயவு செய்து குறிப்பிடவும். சரியான தேதி தெரியாவிட்டால் மாதத்தையும் வருடத்தையும் குறிப்பிடவும். தங்களுடைய பெயர் முன்பே வேறொரு தொகுதியின் வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்தால் முழுமையான பழைய முகவரியை அஞ்சலகக் குறியீட்டு எண்ணுடன் தயவு செய்து தெளிவாக எழுதவும்.

பல்வகை

சமீபத்தில் எடுக்கப்பட்ட பாஸ்போர்ட் அளவிலான வண்ணப்புகைப்படத்தை படிவத்துடன் சேர்த்து சமர்ப்பிக்க வேண்டும். தேவைப்பட்டால் அந்தப் புகைப்படம் வாக்காளர் பட்டியலில் உங்கள் உருவப்படத்தை அச்சிடவோ வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை வழங்கவோ பயன்படுத்தப்படலாம்.